மயில் 5 : இறகு: 3

# மயிலிறகு

மே 18, 2024



பள்ளிபக்கம்
பள்ளி ஆண்டு விழா
வீட்டுபாடம் பண்ணலாம் வாப்பா..
தமிழ் பள்ளிக்கு வாருங்கள்
கனவு காண்போம்!!

பொங்கலோ பொங்கல்
JTM பொங்கல் விழா
பொங்கல் திருவிழா
சாதனைகள்





அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள் ...

வசந்த காலத்தில், மயிலிறகின் வாயிலாக சென்ற இதழின் தொடர்ச்சில் உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி

இந்த இறகின் வழியாக, நமது பள்ளியில் ஆண்டுவிழா, 2022-23 ன் மாணவர்களின் பட்டமளிப்பு விழா, ஆசிரியர்களின் படைப்புகள், நிலை 6 மாணவர்களின் எழுத்து வரிகள் என தமிழ் இனிமையை எடுத்துவந்துள்ளது.

வருடம் 2023-24 ம் ஆண்டில் நமது மாணவர்களின் படைப்புக்கள், சாதனைகள், ஆசிரியைகளின் பங்களிப்புகள் மற்றும் பள்ளியின் விழாக்கள் என அனைத்து நிகழ்வுகளையும் இந்த வருட பதிப்புகளில் உங்களுடன் பகிர்த்துக்கொண்டோம், அதனுடன் விளையாட்டு, கதைகள், கவிதைகள் பாட்டு மற்றும் பள்ளி நடப்புகளையும் மயிலிறகு இதழ்கள் மூலம் தெரிவித்தோம்.

மீண்டும் அடுத்த பள்ளி ஆண்டில் புது படைப்புகளுடன் மயிலிறகு 6 இதழ் 1ல் சந்திப்போம்.

நன்றி வணக்கம்.

**பிரதிபா**

**ஆசிரியர்**

# பள்ளி பக்கம்




தமிழ் ஒரு குழந்தை போல
தமிழ் ஒரு தாய் போல
தமிழ் ஒரு ஆசிரியர் போல
தமிழ் ஒரு அட்ஷயபாத்திரம்
தமிழ் ஒரு நண்பன் போல
யாருக்கு எப்படி வேண்டுமோ அப்படி தமிழ் !!!!

சென்ற வாரம் தமிழ் படிப்பது பற்றிய பள்ளி பக்கம் சில பல கேள்விகளை எழுப்பியது. அவற்றில் என்னை மிகவும் யோசிக்க வைத்த கேள்வி, "நான் ஏன் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும்? அதனால் என்ன பயன்?"

இந்த காலத்து குழந்தை எது செய்வதாக இருந்தாலும் அதனால் அவர்களுக்கு என்ன இலாபம் என்பதிலேயே குறிக்கோளாக இருக்கிறார்கள். தமிழ் கற்றுக் கொள்வது என்பது நமது வயதான பெற்றோர்களை பார்த்துக் கொள்வது மாதிரி. அது நமது கடமை. அதனால் நமக்கு இலாபம் இருக்கலாம் இல்லாமலும் போகலாம். ஆனால், அதற்காக நமது பெற்றோர்களை கை விட்டு விட முடியாது. நாம் தான் அவர்களை பார்த்துக் கொள்ள வேண்டும். அதுவும் அவர்களது மனம் கோணாதபடி, அவர் களுக்கு அசௌகரியம் இல்லாத மாதிரி, அவர்களுக்கு உகந்த மாதிரி, இன்னும் என்னவெல்லாமோ அத்தனையும்.

அதே போல், தமிழ் கற்றுக் கொள்வதும் ஒரு கடமை. வழி வழியாய் நாம் எல்லோரும் செய்த, செய்கின்ற, செய்யப் போகிற கடமை. இந்த கடமையினால் தமிழ் வளரும், தமிழ் மலரும், தமிழ் பெருமிதம் கொள்ளும், தமிழ் வாழ்த்தும், தமிழ் அனைத்துமாய் இருக்கும். செம்மொழியாம் தமிழ் மொழி மிகவும் பழமையானது. இந்த பழமையில் நிறைய புதுமை புகுத்திய காவியங்களும், கவிதைகளும், மற்றும் பல புதினங்களும் உண்டு. இவற்றை எல்லாம் நாம் தமிழ் மொழி வாயிலாகப் படிக்கா விட்டால் அதன் உள்ளார்ந்த அர்த்தங்களை, உணர்வுகளை நம்மால் புரிந்து கொள்ள இயலாது. நாம் புரிந்து கொள்ள விட்டால் அதனை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல முடியாது. ஒவ்வொரு தலைமுறைக்கும் அதற்கு முந்தைய தலைமுறைகளை பற்றி அறிந்து கொள்வது அவர்களது உரிமை. அந்த உரிமையை நாம் அவர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுப்பதின் மூலமே நிலை நாட்ட முடியும்.

தமிழ் கற்றுக்கொள்வது நமக்கு நாமே சேர்த்து வைக்கும் ஒரு சேமிப்பு.

**தமிழ் ஒரு பல்கலை கழகம்**

தமிழ் ஒரு அண்டம்
தமிழ் ஒரு பேரண்டம்
தமிழ் ஒரு பரந்த வெளி

அந்த வெளியில் நாம் தொலைந்து போக வேண்டும். பிறகு நம்மை நாமே தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். அந்த தேடலில் நாம் நம்மை மறந்து போக வேண்டும்.

தமிழ் தேன்
தமிழ் அமுது
தமிழ் தேனமுது

அந்த அமுதத்தைப் பருக நாம் அனைவருக்கும் கற்றுத் தருவோமாக!!!!

# பள்ளி ஆண்டு விழா













தனிஷா
நந்தகுமார்






















20 04 2024 15 23




ஆண்டு
விழா












தீக்ஷா ஸ்ரீ உமா
சங்கர்
தியா தீனதயாளன்
தியா M திவ்யேஷ்
தியா ஸ்ரீ உமா
பகலவன் மகேந்திரன்
பரிதி கார்த்திக்
ரக்ஷிதா செந்தில்குமார்
சஞ்ஜீனா சரவணன்



# வீட்டு பாடம் பண்ணலாம் வாப்பா..

– அமிர்தராஜ்

**அமுதா** : என்ன இனியா, என்ன பண்ற உன் முகமே ஒரே மலர்ச்சியா இருக்கு.

**இனியன்** : நாங்க மூன்று வருடத்திற்கு முன்னாடி சுற்றுலா போன புகைப்படங்களை கூகுள் மெமரிஸ்ல காட்டுச்சு, அதைத்தான் பாத்துட்டு இருக்கேன்.

**அமுதா** : பழைய போட்டோவை பார்த்தா இப்படி பப்பரப்பானு பல்ல காட்டி சிரிச்சிட்டு இருக்க.

**இனியன்** : என்ன இப்படி சொல்லிட்ட, அன்றைக்கு எனக்கு இருந்த மகிழ்ச்சி எல்லாம் மறுபடியும் கிடைச்ச மாதிரில இருக்கு.

**அமுதா** : சரிதான் எங்க அப்பா கூட அவரோட கைபேசியில் நான் குழந்தையா இருக்கும் போது எடுத்த புகைப்படங்களை காமிச்சப்போ எனக்கும் மகிழ்வாகத் தான் இருந்தது.

**இனியன்** : உலகத்தில் மிக பழமையான புகைப்படமே 1827 ல எடுத்ததுதான், அப்போ அதுக்கு முன்னாடி இருந்த காட்சி எல்லாம் நாம பாக்குறதுக்கு வாய்ப்பே இல்லைல. ச்சே.

**அமுதா** : வாய்ப்பு இருக்கு இனியா, கல்வெட்டுகள் குடைவரைக் கோயில்கள் அப்புறம் கீழடி போன்ற இடத்தில் நடக்கும் அகழ்வாராய்ச்சிகள் மூலமா சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாடி இருந்ததை கூட பார்க்க முடியுமே.

**இனியன்** : கண்ணால் பார்க்கும் காட்சியை விட இலக்கியங்களில் சித்தரிக்கப்படுவதை வைத்து நாம் சிந்திக்கும் அகக்காட்சி இருக்கே அதுவும் ஒருவகை பேரானந்தம் தான்.

**அமுதா** : சரியா சொன்ன, தமிழ் நமக்கு கொடுத்திருக்கும் இலக்கியங்கள் மூலமா அந்தந்த காலத்தில் இருக்கிற மக்களின் நிலம், வாழ்க்கை முறை, பண்பாடு, வீரம், கொடைன்னு எல்லாத்தையும் தெரிஞ்சுக்க முடியுமே.

**இனியன்** : அப்ப நாம தமிழ் படிச்சா, பல நூற்றாண்டு மெமரிஸ் பார்க்க முடியும்னு சொல்லு.

**அமுதா** : லட்டு இனிக்கும்னு மத்தவங்க சொன்னா நமக்கு இனிக்குமா என்ன? நம்ம சாப்பிட்டு பார்த்தால் தானே சுவை தெரியும்.

**இனியன்** : தமிழ் படிக்கவேண்டிய அவசியத்தையும், அதில் இருக்கும் ஆனந்தத்தையும், தமிழ் பள்ளியோட சேவையும் நான் இப்ப நல்லா உணர்ந்துட்டேன்.

**அமுதா** : சரி சரி கைப்பேசியை வச்சிட்டு வா செயலில் இறங்குவோம். அட.. வீட்டு பாடம் பண்ணலாம் வாப்பா..



# தமிழ் பள்ளிக்கு வாருங்கள்

– மகேஸ்வரி நரேந்திரன்

வாருங்கள்!! வாருங்கள்!!
தமிழ் பள்ளிக்கு வாருங்கள்!!
வாருங்கள்!! வாருங்கள்!!
தமிழ் பள்ளிக்கு வாருங்கள்!!

நிறங்கள் கற்றோம்!! நிறங்கள் கற்றோம்!!
வானவில்லின் நிறங்கள் கற்றோம்!!

விலங்குகள் கற்றோம்!! விலங்குகள் கற்றோம்!!
பறவைகள் விலங்குகள் பெயரை கற்றோம்!!

ஒழுக்கம் கற்றோம்!! ஒழுக்கம் கற்றோம்!!
நண்பர்களோடு பேசி மகிழ்ந்தோம் !!

கேளுங்கள்!! கேளுங்கள்!!
எங்கள் பேச்சை கேளுங்கள்!!
வாருங்கள்!! வாருங்கள்!!
தமிழ் பள்ளிக்கு வாருங்கள்!





# கனவு காண்போம்!!

மஹேஸ்வரி நரேந்திரன்

கனா கண்டேன்
என் கனா; எனக்கு அது பெரிய வினா!!
இது சாத்தியமா, நிகழுமா
அல்லது இது என் இயலாமையா!!

எதிர்பார்ப்புகள் இல்லா உறவுகள் - என் கனா;
நான் துறவியோ!!
இறைவனின் கருவியோ!!
குழப்பத்தில் நான்
பழக்கத்தில் உறவுகள்!!

எதிர்பார்ப்புகள் இல்லா உறவுகள் - என் கனா;
குழந்தைக்கு தாயிடம் எதிர்பார்ப்பு
மரத்திற்கு வேரிடம் எதிர்பார்ப்பு
நம்பிக்கை எதிர்பார்ப்பின் மறு பெயரோ
அல்லது சிந்திக்க ஒரு செயலோ

எதிர்பார்ப்புகள் இல்லா உறவுகள் - என் கனா;
எதிர்பார்ப்புகள் ஒரு நம்பிக்கை
எதிர்பார்ப்புகள் ஒரு உந்துதல்
எதிர்பார்ப்புகள் ஒரு சுமை
அது ஏற்கவோ அல்லது இழுக்கவோ!!

எதிர்பார்ப்புகள் இல்லா உறவுகள் - என் கனா;
எதிர்பார்ப்புகள் தரும் உத்வேகம்
எதிர்பார்ப்புகள் தரும் பூரிப்பு
எதிர்பார்ப்புகள் ஒரு பளு
அதை ஏற்றால் சுலபம் எதிர்த்தால் கடினம்!!

எதிர்பார்ப்புகள் இல்லா உறவுகள் - என் கனா;
எதிர்பார்ப்புகளில் இருக்கும் காத்திருப்பு
எதிர்பார்ப்புகளில் இருக்கும் ஒத்துழைப்பு
எதிர்பார்ப்புகளில் இருக்கும் ஏமாற்றம்
அதை மறைத்தால் துயரம் காட்டினால் தளர்வு!!

எதிர்பார்ப்புகள் இல்லா உறவுகள் - என் கனா;
எதிர்பார்ப்புகள் தரும் கொள்கை
எதிர்பார்ப்புகளில் வரும் சந்தோஷம்
எதிர்பார்ப்புகள் தரும் பாரம்
அது எனக்கு தடையா அல்லது முன்னேற்றத்திற்கான படியா!!

எதிர்பார்ப்புகள் கனவுகளுக்கு ஒரு உந்துதல்
கனவுகள் மனதிற்கு தூண்டுதல்
அந்த தூண்டுதல் தரும் வாய்ப்புகள்
வாய்ப்புகள் தரும் பதில்கள்

என் கனா அது ஒரு வினாவா அல்லது எனக்கு விடையா!!

எதிர்பார்ப்புகள் வாழ்க்கையின் நியதி!
அளவிற்கு மீறினால் மிகவும் அநீதி.
அனைத்திற்கும் வேண்டும் சமநிலை!!

கனவு காண்பது அனைவரின் உரிமை
அதை உண்மையாக்குவது அவர்களின் கடமை
வாழ்க்கையே எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கையோடு போக
பாரதியின் சொற்களை எடுத்து
கனவு மெய் பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்!!

என்னும் இலக்கோடு
என் கனா நிகழும்!
எதிர்பார்ப்புகள் குறையும்
என் மனமும் ஏற்கும்
வாழ்கையில் இன்பம் நிறையும்!!

கனவு காண்போம் !! வெற்றியை நோக்கி பயணிப்போம்!!



# பொங்கலோ பொங்கல்

**ஹாசினி வினோத்**



நான் பொங்கல் திருநாளை இந்தியாவில் கொண்டாடினேன்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கைக்கு ஏற்ப தமிழர் திருநாளே பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாளுக்கு முதல் நாள் போகி திருநாள். பழையன கழிதலும் புதியன புகுதலும் போகிப் பண்டிகையின் சிறப்பு.

நாங்கள் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொங்கல் பண்டிகை உழவர்களின் உழைப்பால் விளைந்த பொருட்களான மஞ்சல், இஞ்சி, கரும்பு, வெற்றிலைபாக்கு, வாழைப்பழம், போன்றவற்றைப் படைத்து, பானையில் பச்சரிசி பொங்கலிட்டு.

பால் பொங்கும் போது, "பொங்கலோ பொங்கல்" என மகிழ்ச்சியுடன் ஓசை எழுப்பினோம். நாங்கள் வீட்டின் வாசலில் வண்ணக் கோலங்கள் இட்டோம். தெருக்களில் எல்லாம் விழா போல் இருந்தது.

பொங்களுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கள் மாடுகளுக்கு நன்றி கூறும் வகையில் மாடுகளை குளிப்பாட்டி அலங்கரித்து வழிபடுவதான் மாட்டுபொங்கல்.

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் வரும் நிகழ்வே காணும் பொங்கல்.நாங்கள் குடும்பத்துன் பேரங்காடி சென்றோம்.

அங்கு கிராமிய நடன கலைஞ்கர்களின் ஆடல் நிகழச்சி பார்த்தோம். மிக நன்றாக இருந்தது.

JTM பொங்கள் விழாவில் பங்கேற்றோம் அந்த நிகழ்ச்சிகைகள் பார்த்து மகிழ்ந்தோம்.

சூனா பானா பெட்டி கடை பார்த்தோம் அதில் விற்க்கும் திண்பண்டங்களை உண்டு மகிழ்த்தோம்.




# JTM பொங்கல் விழா

## சஞ்சய் ராஜேஷ் நிலை 6

என் பெயர் சஞ்சய் ராஜேஷ், நான் நிலை 6 படிக்கிறேன். நான் JTM பொங்கல் விழா கொண்டாட்டம் பற்றிய எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன்.



- பொங்கல் விழாவில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன்.
- என் நண்பர்கள் அனைவரையும் பார்க்க முடிந்தது.
- வித்தியாசமான தமிழ் சிற்றுண்டிகளை சுவைக்கும் வாய்ப்பு கிடைத்தது.
- எனக்கு அங்கு பல தமிழ் நிகழ்ச்சிகளை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.
- எனக்கு அதில் மிகவும் பிடித்தது நடன நிகழ்ச்சிகள்.
- மற்றும் தமிழ் பள்ளி நாடகம் மிகவும் வேடிக்கையாக இருந்தது.
- எனக்கு பறை நிகழ்ச்சி மிகவும் பிடித்தது. அடுத்த ஆண்டு நானும் அணியில் சேர்ந்து பறை கற்றுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.
- என் தம்பியும் அவனது நண்பர்களும் ஆடிய நடனம் அழகாக இருந்தது.
- ஆசிரியர்களின் நாடக நிகழ்ச்சியின் நடுவில் நான் பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற சில புகைப் படங்களை பார்க்க எனக்கு பெருமையாக இருந்தது.
- தமிழ் கலாச்சாரத்தை உணர்த்தும் வகையில் அழகான மேடை பேச்சுக்கள், சிறந்த நடனங்கள் சுவையான உணவுகள். இது போன்ற பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நான் ஆசைப் படுகிறேன்.



# பொங்கல் திருவிழா

ஹர்ஷிதா முத்தையா

பொங்கல் திருவிழா நான்கு வகையாக கொண்டாடுகிறார்கள்.

போகி பொங்கல்
சூரிய பொங்கல்
மாட்டுப் பொங்கல்
காணும் பொங்கல்

### முதல் நாள் போகி பொங்கல்.

போகி பொங்கல் அன்று வீட்டை சுத்தம் செய்வார்கள் பழைய பொருட்களை எரித்து புதிய பொருட்களை வீட்டில் வைப்பார்கள்.

### இரண்டாவது நாள் சூரிய பொங்கல்

சூரிய பொங்கல் நாளில் புதிய ஆடைகள் அணிந்து ஒரு பானையை சூரியன் முன்பு வைத்து இரண்டு கரும்புகள் இடத்தி பானையில் மஞ்சள் கொத்து அல்லது மலர் மாலை பானையை சுற்றி வைப்பார்கள். அந்த பொங்கல் பானையில் பொங்கல் பொங்கி, பின்பு சூரியனுக்கு பொங்கல் படைத்து வணங்குவார்கள்.

### மூன்றாவது நாள் மாட்டுப்பொங்கல்

மாட்டுப் பொங்கல் நாளில் மாட்டை குளிப்பாட்டி அலங்காரம் செய்வார்கள். மாட்டுப்பொங்கல் நாளில் மாட்டுக்கு பொங்கல் படைத்து சாமி கும்பிடுவார்கள்.

### நான்காவது நாள் காணும் பொங்கல்

காணும் பொங்கல் அன்று குடும்பத்துடன் கடற்கரைக்கு சென்று கொண்டாடுவார்கள். கடற்கரைக்குச் சென்று அன்று அந்த நாளை பொழுது போக்குவார்கள். இந்த காணும் பொங்கல் குடும்பத்துடன் சந்தோஷமாக கொண்டாட கூடிய ஒரு நாளாக இருக்கிறது.

இதுதான் நான்கு வகையான பொங்கல்.

நன்றி

# சாதனைகள்








School mail: Gmail
jacksonvilletamilpalli@gmail.com
Send your contributions mail:
Kathiravan@jtmtamilpalli.onmicrosoft.com
Pradeekutty@yahoo.co.in

Send your feedback:
Kathiravan@jtmtamilpalli.onmicrosoft.com
Pradeekutty@yahoo.co.in

Website- https://jtmtamilschool.org

Youtube: https://youtube.com/@JTMTamilPalli

Instagram: https:
//instagram.com/jtmtamilpalli?igshid=MzRlODBiNWFlZA==

## Facebook:

https://www.facebook.com/groups/
1064996684922295/permalink/
1064997284922235/?
mibextid=S66gvF

## Linked In:

https://www.linkedin.com/
company/jacksonville-tamil-palli/